# <u>In the Court of the District Munsif, Eraniel</u>

**Original Suit No. 26/2019** **Date:10.02.2026.**

**(PW2)- கணபதி**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு **விசாரணை தொடர்ச்சி**</u>

1. பிரதிவாதி மனைவி சகுந்தலா தபசில் புல எண் சொத்துகளை உட்பிரிவு செய்ய வட்டாச்சியரிடம் மனு செய்து அதன் படி அளந்து உட்பிரிவு செய்யதாதால் மேற்படி சகுந்தலா உயர் நீதிமன்ற மதுரை கிளையில் WP.No. 4068/2018 என்ற மனுவை தாக்கல் செய்தார் என்றாலும் அதில் நான் 5ம் மனுதாரர் என்றாலும் சரிதான். மேற்படி மனுவில் உயர் நீதிமன்றத்தால் 8 வாரத்திற்குள் வழக்கு புல எண் சொத்தை அளந்து உட்பிரிவு செய்ய வேண்டும் என்றும் தேவைப்பட்டால் காவல் துறை உதவியை நாடாலம் என்றும் குறிப்பிட்டு இருந்தது என்றால் சரிதான்.

2. மேற்படி உத்தரவின் அடிப்படையில் வழக்கு புல எண் சொத்துக்கள் அளந்து உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் அளவீடுக்கு நானும் மற்ற அதிகாரிகளும் தயாராக இருந்தோம் ஆனால் பிரதிவாதி அளவீடு செய்ய விடவில்லை. மேற்படி உத்தரவின் அடிப்படையில் நாளது தேதி வரை தபசில் புல எண் சொத்து அளந்து உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் அடிப்படையில் வருவாய் துறை அதிகாரிகள் சொத்தை அளந்து விட கூடாது என்ற கெட்ட எண்ணதில் இந்த வழக்கை தாக்கல் செய்துளேன் என்றால் சரியல்ல. புல எண் 60/13 சொத்தின் தென் மேற்கு மூளையில் இருந்து மேற்க்காக உள்ள தார் ரோடிற்கு செல்வதற்கு எங்களது குடும்ப சொத்தில் வழிபாதை இல்லை என்றால் சரிதான், 3 அடி பாதை வழியாக தார் சாலை சென்று அடைவேன். மேற்படி 3அடி பாதையில் எனக்கு எதன் அடிப்படையில் உரிமை ஏற்படுகிறது என்றால் மேற்படி பாதை பொது பாதை ஆகும்.

3. மேற்படி 3 அடி பாதைக்கு ஆவணம் எதேனும் உள்ளதா என்றால் சுந்தரம் பிள்ளை கிரயம் பெற்றுள்ளார். மேற்படி 3 அடி பாதை வழியாக யார் எல்லாம் அவர்களது சொத்தை சென்று அடைவர்கள் என்றால் ஈஸ்வர பிள்ளை, சுந்தரம் பிள்ளை, நான் ஆகியோர் ஆவோம். ஈஸ்வர பிள்ளைக்கு மேற்படி பாதையை தொட்டு வீடு உள்ளதா என்றால் வீடு இல்லை 13 செண்டில் மனை உள்ளது. ஈஸ்வர பிள்ளை தற்போது மேறப்டி மனைக்கு எவ்வாறு செல்கிறார் என்றால் 13 செண்ட்டை சுந்தரம் பிள்ளை கிரயம் பெற்று 13 செண்டடிற்கு ஒட்டி உள்ள பொது பாதையில் அடைத்துவிட்டார்.

மேற்படி பொது பாதையை அடைத்தது சம்பந்தமாக நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

4. எந்த வித பொது பாதையும் இல்லை என்றாலும் அது அடைக்கப்படவில்லை என்றாலும் அது சம்பந்தமாக எந்தவித புகாரும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது அப்பா எனக்கு எழுதி கொடுத்த சொத்திற்கு கிழக்கும் தெற்கும் பிரதிவாதியின் சொத்து என்றால் சரியல்ல. நான் இதற்கு முன்பு OS.NO. 143/2001 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றாலும் மேற்படி வழக்கு நான் குறிப்பிடும் பாதைக்காக வேண்டி தாக்கல் செய்திருந்தேனா என்றால் பொது பாதைக்காக தான் தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கு விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் குறிப்பிடும் பாதை வழியாக மின் இணைப்பு கொண்டு செல்லவே தாக்கல் செய்திருந்தேன் என்றாலும் சரியல்ல.

5. OS.NO. 5/2002 என்ற வழக்கை பிரதிவாதி என் மீதும் மின்சார வாரியத்தின் மீதும் மின் இணைப்பு பெற வேண்டி தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி இந்த இரண்டு வழக்களிலும் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு மேற்படி ஆணையர் ஒரு அறிக்கை தாக்கல் செய்திருந்தார் என்றாலும் மேற்படி அறிக்கையில் ஒரு பாதை காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது தவறாகும். மேற்படி அறிக்கையில் நீதிமன்ற ஆணையர் ஒரு பாதையை குறிப்பிட்டு இருந்தார் என்றாலும் மேற்படி பாதை இவ்வழக்கின் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி முந்தைய வழக்குகளில் நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டுள்ள பாதையை நான் கிரயம் பெற்றேன் என்றால் சரியல்ல.

6. மேற்படி முந்தைய வழக்கில் நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டுள்ள பாதையை நான் கிரயம் பெற்றேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பெய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பொது பாதையை எனது மகன் கிரயம் பெறுவதற்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உட்பிரிவு செய்யப்பட்டதாக காட்டப்படும் ஆவணங்கள் அனைத்தும் செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் குறிப்பிடும் 8 லிங்ஸ் பாதையானது எங்கு உள்ளது என்றால் 3 அடி பொது பாதைக்கு கிழக்கு பக்கம் உள்ளது. மேற்படி நான் குறிப்பிடுவது போல் எந்த பாதையும் இல்லை என்றால் சரியல்ல. நான் எனது மகனுக்கு எழுதிக் கொடுத்த சொத்தனாது எனக்கு கிடைத்த 12 செண்ட் சொத்தில் தெற்கு பக்கம் 5 செண்ட் என்றால் சரிதான்.

7. மேற்படி 5 செண்ட் சொத்திற்கு தெற்கு பக்கம் நான் குறிப்பிடும் 8 லிங்ஸ் வழிபாதை உள்ளது என்றால் சரிதான். எனது மகன் கிரயம் பெற்ற ஒரு செண்ட் சொத்தில் தெற்கு பக்கம் எல்கையாக 3 அடி வழிபாதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், பொது பாதையாகும். மேற்படி 3 அடி

பாதைக்கு எந்த திசையில் 8 லிங்ஸ் வழிபாதை உள்ளது என்றால் கிழக்கு பக்கம் ஆகும். இந்த பிரதிவாதி எங்களது சொத்தின் எல்கை சுவரை சேதப்படுத்தவில்லை என்றால் சேதப்படுத்தவில்லை. பிரதிவாதி எப்போதாவது பாதையை சேதப்படுத்துவேன் என்றோா காம்பவுண்ட் சுவரை சேதப்படுத்துவேண் என்றோ தெரிவித்தார்களோ என்றால் பிரதிவாதியுடன் சேர்த்து 5 நபர்கள் காம்பவுண்ட்டை சேதப்படுத்துவேண் என்று அச்சுறுத்துகிறார்கள். மேற்படி சம்பவம் குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் குறிப்பிடுவது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பெய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

8. இந்த வழக்கிற்கு எந்த வித வழக்கு மூலம் இல்லை என்றாலும் இவ்வழக்கு புல எண் சொத்தை உட்பிரிவு செய்துவிடகூடாது என்ற கெட்ட எண்ணத்தல் பொய்யான சங்கதிகளை கூறியும் பொய்யான வழக்கு மூலத்தை குறிப்பிட்டும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் வழக்கு பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டியது என்றாலும் சரியல்ல.